ஸ்ரீ:

# முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

[௧௦௮]

3184

சேதுஸம்ஸ்தான வித்துவான்

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப் பிரசுரம்—௧௪.

இரண்டாம் பதிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1935

[இதன் விலை அணா-3]

ஸ்ரீ:

கடவுள் துணை.

# முதற்பதிப்பின் முகவுரை.

முத்தொள்ளாயிரம் என்பது, சேரர் பாண்டியர் சோழர் என்னும் முடியுடைத் தமிழரசர் மூவரையும் அறம்பொருளின்பம்பற்றிப் புகழ்ந்துள்ள ஈராயிரத் தெழுநூறு வெண்பாக்களான் ஆயதோரரிய பெரிய பண்டைத் தண்டமிழ்நூல். இது மூவேந்தரையும் தனித்தனியே சிறப்பித்துவரும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களாக மூன்றுதொள்ளாயிரமுடைமையின், முத்தொள்ளாயிரம் எனப் பெயர்சிறந்ததென்ப. இது முடியுடைவேந்தர்க்கு ஏற்ற பெற்றியான் நாடு, நகர், திறை, தானை, யானை, குதிரை, அமர்க்களம், வென்றி, கொடை, புகழ், இன்பம் என்பன முதலிய பலபல வகைகளாகப் படைத்துக்கொண்டு புகழ்ந்ததாமெனத் தோற்றுகின்றது. "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்காப்பியம் செய்யுளியல்-உ௩௧) என்பதனுரையிற்பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேற்றாகிய விருந்து என்பதற்கு இம்முத்தொள்ளாயிரநூலை எடுத்துக் காட்டுதலான் இது பழையதும் புதியதுமாகிய கதைமேற்றன்றி ஒருவர் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் படைத்துச் செய்த தொடர்நிலைச்செய்யுளென்பதும், "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே, குறுவெண் பாட்டி னளவெழு சீரே" (தொல். செய்-௧௫அ) என்பதன் உரையில், அவ்வுரையாளரிருவரும், முறையே, "பதினெண்கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேறாமற் செய்யுள்செய்தார் பிறசான்றோரு மெனக் கொள்க" எனவும், "இக்கருத்தானே கீழ்க்கணக்கினுள் நான்கடியும் ஈரடியுமே மிக வந்தவாறும் முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிகவந்தவாறும் காண்க" எனவும் கூறியவாற்றான், இந்நூல்வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறுபான்மை ஐந்து ஆறு அடிகளானும் வந்தன என்பதும், பேராசிரியர் "அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்" (தொல். செய். ௧௬௧) என்பதனுரையில் 'கைக்கிளைச்செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்' எனக் கூறுதலான், இதன்கட் சுட்டியொருவர் பெயர்கொண்ட

பாடாண்டிணைப் புறப்புறக் கைக்கிளைச்செய்யுட்கள் பலவா மென்பதும் அறியப்படுவன. வச்சத் தொள்ளாயிரமும் ஒட்டக்கூத்தர் செய்த அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிர நெறியே தழுவி யுரைக்கப்பட்டனவாமென ஊகிக்கப்படுகின்றன. இந்நூல் இந்நாட்டுத் தமிழ்க்குடிகளும் தமிழரசர்களுமே நிலவிய மிகப் பழையகாலத்தே இயற்றப்பட்டதாதலின், இதனால் அத்தொன்மைக்கால வியல்புகள் பல நன்கறியலாகுமெனத் தெரிகின்றது. இத்தகைப் பெரிய பழையநூலின் ஒருசில செய்யுட்களே புறத்திரட்டென்னும் இனிய செய்யுட்டொகைநூலில் ஆங்காங்குக் கோக்கப்பட்டிருத்தலிற் காணப்படுதலல்லது இந்நூன்முழுதும் ஒருசேரக் காண்பது இக்காலத் தரிதாயிற்று. நல்லாசிரியர் தொல்லுரைகளில் தமிழ் மூவேந்தரிலொருவரைச் சிறப்பித்து இனிய வெண்பாயாப்பின் வரும் பாடல்கள் சில இம்முத்தொள்ளாயிரமா மென்று கருதப்படுகின்றன. அவை, புறத்திரட்டிற் காணப்பட்டனபோல, முத்தொள்ளாயிரமெனப் பெயர்குறிக்கப்படாமையின் ஒருதலையாகத் துணியப்படவில்லை. புறத்திரட்டின்கண்ணுள்ள அவ்வொருசில முத்தொள்ளாயிரச்செய்யுட்களும் தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் தித்திப்பனவாதலின், அவற்றைப் பலரும் அறிந்து கூட்டுண்டு களிக்குமாறு, இச் 'செந்தமிழ்'வாயிலாக வெளியிடற் கவாவினேன். இந்நூலாசிரியர்பெயர் முதலியன ஒன்றும் இப்போது அறியலாவதில்லை. இந்நூற் கடவுள் வாழ்த்துவெண்பாவாலும் புகழின்கணுள்ள 'மடங்காமயிலூர்தி' 'செங்கணெடியான்' என்னும் வெண்பாக்களாலும் இவர் சமயக் கோட்பாட்டிற் சைவராவர் எனக் கருதுகின்றேன்: ஈண்டு வெளிப்படும் இம் முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் இச்சங்கத்துக்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகளினின்று திரட்டப்பட்டன. இவற்றுள் இன்பப்பகுதிபற்றிய இன்பொருட்பாடல்கள் சென்னையிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர் ப்ரும்ம ஸ்ரீ தி-வேங்கடராமையங்காரவர்களுடைய புறத்திரட்டுக் காமத்துப்பால் ஏட்டிலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீமத் ரா-சுப்பிரமணியக் கவிராயரவர்களுடைய புறத்திரட்டேட்டிலும் இருந்தன.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

செந்தமிழ்ப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

கடவுள் துணை.

# முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

3184

## கடவுள்வாழ்த்து.

க மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா ளுதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர்திரைநீர் வேலி யுலகு.*

## நாடு.

உ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

ங நந்தி னிளஞ்சினையும் புன்னைக் †குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையுஞ்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்ன
னகைமுத்த வெண்குடையா னாடு.

ச காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
‡ நாவலோஒ § வென்றழைக்கு நாளோதை—காவலன்றன்

---

* இதன் பின்னடி யிரண்டையும் நீலகேசித்தெருட்டுந் கடவுள்வாழ்த்துரையிற் சமயதிவாகரமுனிவர் மேற்கோள்காட்டியுள்ளார். 'என்றென் றயருமால்' எனவும் பாடமுண்டு.

† 'கருவிமொட்டும்' எனவும் பாடம்.

‡ "இதனுள் 'நாவலோஒ' என்புழி உயிரளபெடை தளைசீர்வண்ணங்களோடு மாறுகொள்ளாதுநின்று அலகுபெற்றவாறு" என்பது யாப்பருங்கல விருத்தி (சூத்திரம். ச).

§ 'வென்றிசைக்கு' மென்பது பிரதிபேதம்.

*

கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

## நகர்.

ரு களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட செங்கட்—டுளிகலந்
தோங்கெழில் யானை மிதிப்பச்சே றுயிற்றே
பூம்புனல் வஞ்சி யகம். *

சு மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மிகுவதோர் தன்மைத்தாய்க்—காலையே
விற்பயில் வானகம் போலுமே வேல்வளவன்
பொற்பா ருறந்தை யகம். *

எ மைந்தரொ டூடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும வீர்ஞ்சாந்தின் சேறிழுக்கி—யெங்குந்
தடுமாற லாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம். *

## பகைப்புலம்பழித்தல்.

அ கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—யெரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

கூ வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்

---

* இம்மூன்று செய்யுளும், இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைத் திருவாளர் சோமசுந்தரதேசிகரவர்கள்புறத்திரட்டுப்பிரதியிலிருந் தெடுத்தெழுதிச் செந்தமிழின் 14—ஆம் தொகுதி ௩௭௪—ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டவை. சங்கத்துப் புறத்திரட்டேட்டுச்சுவடிகளிலும் முத்தொள்ளாயிரச் செய்யுட்களாகக் காட்டப்பட்டுள்ளன.

முகையவிழ்தார்க் கோதை *முசிறியார் கோமா
னகையிலைவேல் காய்த்தினார் நாடு.†

௧0 ‡ இரியன் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—பரையிரவில்
§ ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
னுமம்பா ராட்டாதார் நாடு.¶

௧௧ வாகை வனமாலை சூடி யரசுறையு
மோகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

---

* முசிறி – இது சேரநாட்டுச் சுள்ளியாறு கடலுடன்கலக்குமிடத்திருந்த பெரிய துறைமுகப்பட்டினம். முற்காலத்து மேற்றேயத்து யவனர்மரக்கலங்கள் மிளகு முதலியன கொள்ளற்கு மிகுதியாகத் தங்கிய பெருந் துறைமுகம் இதுவே; இதனைச் "சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமா ணன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழுமுசிறி" (௧௪௯) என அகப்பாட்டின்கண் வருதலான் அறிக. தாலமி, பிளினி முதலிய மேற்றிசை யாத்திரைக்காரரும் இவ்வூர்த் துறைமுகத்தைப்பற்றியும் இதன்கண் மிளகேற்றுதலைப்பற்றியும் மிகுதியாகக் கூறியுள்ளாரென்ப. வராகமிஹிரர் பிரகற்சங்கிதைக்கண் மரீசிபட்டனம் என்னும் ஊர் தென்பாகத்துள்ளதாகக் கூறியுள்ளார். அஃது இம்முசிறியேயாமென்பது பல விவேகிகளுடைய கொள்கை: (மரீசி-மிளகு). இவ்வூரினை முன்னையோர் பாண்டியன் வளைந்து பெரும்போர் புரிந்து இதன்கணிருந்த சேரர்க்குரிய படிமம் ஒன்றைக் கவர்ந்துசென்றான் என்பது ௧௪௯-ஆம் அகப்பாட்டான் அறியப்படுகின்றது.

†இது, தொல். பொருள். புறத். ௮–ஆஞ்சூத்திரத்துக் 'குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளை'யும் என்பதற்கு நச்சினார்க்கினியரால் உதாரணமாக எடுத்தாளப்பட்டது.

‡ இரியன் மகளிர்-கெடுதலுற்ற மகளிர். இலை ஞெமல்-இலைச்சருகு; "ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி, படுஞெமல் புதையப் பொத்தி" என்பது அகம் (௩௯). § ஊமன்-கூகை.

¶இது, யாப்பருங்கலவிருத்தி ஒழிபியலிற் பதின்மூன்றெழுத்தடி வெண்பாவுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

கஉ * பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையி
ஞன்போ யரிவையர்போ யாடவர்போ யாயீன்ற
வீன்போ யுறையு மிடம்.

## திறை.

கங பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

கச நேமி நிமிர்தோ ணிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல ஞணையா
லேம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

கரு நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொ
ளிறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்ருர் மொய்த்து.

கசு நின்றீமின் மன்னீர் நெருநற் றிரைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணுகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

---

* பறை நிறைந்த கொல்யானை,— கொல்யானையை நீர்க்குவிட்டாற் பறைசாற்றிச்செல்லுதல் முன்னைவழக்கு. "நிறையழி கொல்யானை நீர்க்கு விட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" என்பது குறிஞ்சிக்கலி (உ௦). 'அறைபறையானை' என்பர் முன்னும் (சுரு). "மத்தகஜமானது முன்னே தலைப்பறைகொட்ட வருமாபோலே வாடையை முன்னடக்கவிட்டுக் கொண்டாய்த்து மாலைவருகிறது" எனத் திருவாய்மொழியீட்டினும் (க௦-௩-ரு) வருதல் காண்க.

## எயில்கோடல்.

கஎ செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாற
னுருமி னிடிமுர சார்ப்ப— வரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.*

## குதிரைமறம்.

கஅ நிரைகதிர்வேன் மாறனை நேர்நின்ருர் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா—வரசர்த
முன்முன்ன †வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

## யானைமறம்.

கக வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேருது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

உ0 ‡ அயிற்கதவம் பாய்ந்துழக்கி [1]யாற்றல்சான் மன்ன
ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
[2]பாய்தோய்ந்த நாவாய்போற் [3]றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் [4]கிள்ளி களிறு.

---

* வேந்து போய் அரவுறழ்ந்து வயிறெரிய வேம் என்க. " புற்றிழந்த, நாகக் குழாம்போ னடுங்கின வென்னுங்கொல், வேகக் குழாக்களிற்று வேந்து" என வரும்.

† 'வீழ்ந்தார்' எனவும் பாடம்.

‡ இது, தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் ௬க—ஆம் சூத்திரத்து நச்சினார்க்கினியருரையிலும், செய்யுளியல் எசு—ஆம் சூத்திரத்துப் பேராசிரியருரையிலும் மேற்கோளாக எடுத்தாளப்பட்டது.

[பி-ம்.] [1] ஆழித்தேர்குத்தி. [2] பாய்செய்த. [3] றோன்றிற்றே. [4] கோதை களிறு.

உக மருப்பூசி யாக மறங்கனல்வேன் [1]மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

உஉ உருவத்தார்த் தென்னவ னேங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—லொருகோடு
வேற்று ரகல முழுமே யொருகோடு
மாற்றார் மதிற்றிறக்கு மால்.

உங கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

உச கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்*ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேநங்
† கோழியர்கோன் கிள்ளி களிறு.

உரு பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

உசா தோற்ற மலைகட லோசை புயல்கடா அங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்க்—‡கூற்றுங்

---

[பி-ம்.] 1 'மன்னர் திருத்தகு'

* உஞ்சை-உச்சயினிநகரம்.

† கோழி-உறையூர்; "முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி யென்பது பெயராயிற்று" என்றார் அடியார்க்குநல்லார் (சிலப். நாடுகாண். அடி. உசஅ உரை).

‡ கூற்றும் குறியெதிர்ப்பைகொள்ளுந் தகைமைத்து—யமனும் கொலையைக் கடன்வாங்கும் ஆற்றலுடையது. 'குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே எதிர்கொடுப்பது' என்றார் பரிமேலழகர் (திருக்குறள்-உஉக உரை).

குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோ
னெறிகதிர்வேன் மாறன் களிறு.

உஎ அடிமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித ஞெணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

## களம்.

உஅ வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

உகூ மரகதப்பூண் மன்னவர் தோள்வளை *கிழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே †பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

௩0 முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—யெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

௩க ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
றானையாற் கண்புதைத்தான் றார்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

---

* 'கிளா' எனவும் பாடம்.

† பூழியன்-சேரன்: பூழிநாட்டையுடையான் என்பது பொருள்; "பூழியர்கோக் கோதை" என்பர் முன்னும் (கூஎ).

## வென்றி.

௩௨ கொடித்தலைத்தார்த் தென்னவன் றேற்றான்போ னின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேற்
கண்ணோரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணோரா மன்னரைக் கண்டு.

௩௩ தொழிறேற்றாப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர்—கழலடைந்து
மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணீத்தந் தீர்க்கு மருந்து.

## புகழ்.

௩௪ மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமரு
ணின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

௩௫ செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றா—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாற
னடிமிசையே காணப் படும்.*

௩௬ கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்தாய்

---

*" தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமம்
சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் றெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை
பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே"
என்பது திருவாய்மொழி (உ-அ-௬).

தென்னவனே தேர்வெந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.*

௩எ வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

௩அ மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.†

௩கூ பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூ
னீர்படுப வெண்சங்கு நித்திலமுஞ்—சாரன்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு.

௪0 அருமணி யைந்தலை யாடரவம் வானத்
துருமேற்றை யஞ்சி யொளிக்குஞ்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் ‡கனவுமே
யங்கண்மா ஞாலத் தரசு.

---

* "குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெரு
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு.

என்பதும் இக்கருத்தேபற்றிவந்தது. (தொல்காப்பியப் புறத்திணையியல்-ரு. நச்சினார்க்கினியருரை மேற்கோள்).

† தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் ௩௬—ஆம் சூத்திரத்து நச்சினார்க்கினியருரை மேற்கோள்.

‡ கனவும்-அச்சத்தாற் கனவினும் காணும்.

சக *அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த [1]வொள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடு பக்கமு முண்டு குறுநரி
[2]கொண்டாடும் பக்கமு முண்டு.

ச௨ கண்ணார் கதவந் திறமின் களிறொடு [3]தேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்.†

சரு அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தா—ரெந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.‡

## கைக்கிளை.

சச செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொன்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு.

சரு திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்

---

* இது, தொல். பொருள். புறத். 36–ஆம் சூத்திரத்து வாண்மங் கலத்துக்கு உதாரணமாக நச்சினார்க்கினியரால் எடுத்தாளப்பட்டது.

[பி-ம்.] [1]வொள்வாள். [2]யுண்டாடு. [3]தார்.

† இது, தொல். பொருள். புறத் 36—ஆம் சூத்திரத்துச் 'சிறந்த நாளணி செற்ற நீக்கிப்-பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்' என்பதனுள் செருவொழிந்ததற்கு நச்சினார்க்கினியரால் உதாரணமாகக் காட்டப்பட்டது.

‡ தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல் 36–ஆம் சூத்திரத்து வெள்ளணிக்கு நச்சினார்க்கினியருரை மேற்கோள்.

றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.*

சசு தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு.

சஎ காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோ
னன்னலங் காணக் கதவங் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

சஅ துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
† சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
‡ சாலேகஞ் சார நட.

சகூ எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாற—னுலாஅங்காற்
§ பைய நடக்கவுந் தேற்றாயா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து.

ரு0 நீணீலத் தார்வளவ னின்மேலா னாகவு
¶நாணின்மை யின்றி நடத்தியா—னீணீலங்
கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

---

* தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் 210-ஆம் சூத்திரத்துப்பேராசிரியருரை மேற்கோள்.

† சேலேகம்—சந்தனம். ‡ சாலேகம்-சாளரம்.

§ "மடநடை பெண்மை வனப்பென்ப தோராய், கடுநடை கற்றாய் கணவ னிழப்பாய், பிடியலை பாவி யெனப்பூண் பிறழ்ந்து, புடைமுலை விம்மப் புலந்தனர் நிற்பார்" என்பது சிந்தாமணி. மண்மகள். உச.

¶ 'நாணீர்மையின்றி' என்றிருப்பிற் பொருந்தும்.

ருக சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிறொறுங் கண்.

ருஉ போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
வூரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

ருங ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்துகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

ருச குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படி
னுபுகு மாலை யணிமலையிற் றீயேபோ
னுடறி கௌவை தரும்.

ருரு வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கு
நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வெளவுத லாமோ வவர் தாய்மார்
செங்கோல னல்ல னென.

ருசு வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

ருஎ வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டா—னிமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

ருஅ கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி லுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

ருகூ மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிரு
ளென்னுயிரு மெண்ணப் படுமாயி—னென்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
*நீரொழுகப் பாலொழுகா வாறு.

கூ0 என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லா
மன்னன் புனலுடன் வௌவினு—னென்னே
யரவக லல்குலா யாறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

கூக தானேற் றணிக்குடைக் காவலனுற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானே
வெளியேனோர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாற
னளியானே லன்றென்பா ரார்.

கூஉ †கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணு—மினவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானுர்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

கூங தாணைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனே—யானை
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

---

* "முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந்த வர்க்கு
மிறைதிரியா னேரொக்கல் வேண்டு—முறைதிரிந்து
நேரொழுகா னாயி னதுவா மொருபக்க
நீரொழுகப் பாலொழுகு மாறு" (பழமொழி-உ0கூ).

† தொல். பொருள். செய்யுளியல் கசூ0-ஆம் சூத்திரத்துப் பேரா சிரியருரை மேற்கோள்.

சுச தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரான்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

சுரு அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பராற் றோழி—யிறையிறந்த
வங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு.

சுசு * களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—றெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தே
னென்காண்பே னென்னலால் யான்.

சுஎ †கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலு
நீர்நிலை நின்ற தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

சுஅ அறிவாரார்...........பெண்டிரே மாகச்
செறிவார் தலைமேல் நடந்து—மறிதிரை
மாட முரிஞ்சு மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

சுகூ அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாரு-
மென்னை யழியுஞ்சொற் சொல்லுவர்—நுண்ணிலைய
‡ தெங்குண்ட தேரை §படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

---

* தொல். பொருள். புறத். 28-ஆம் சூத்திரத்து நச்சினார்க்கினியருரை மேற்கோள்.

† இது, யாப்பருங்கலவிருத்தி ஒழிபியலில் மெய்வாழ்த்துக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுளது.

‡ "தேரையார் செவ்விளநீ ருண்ணார் பழிசுமப்பர்" என்ப.

§ 'படுபழி பட்டேன்' என்றிருக்கிற் பொருந்தும்.

எ0 நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
ஆரிரே யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

எக புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணே—னிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோன் வளவனை யானிதன்றோ
கண்ணாரக் கண்டறியா வாறு.

எஉ கைய தவன்கடலுட் சங்கமாற் பூண்டதுவுஞ்
செய்யசங் கீன்ற செழுமுத்தான்—மெய்யதுவு
மன்பொரு வேன்மாறன் வார்பொதியிற் சந்தனமா
லென்பெறு வாடுமென் றோள்.

எங நாணுக்காற் பெண்மை நலனழியு முன்னின்று
காணுக்காற் கைவளையுஞ் சோருமாற்—காணொன்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோ ராறு.

எச * வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோ
லேரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை.

எரு ஏற்பக் குடைந்தாடி லேசுவ ரல்லாக்கால்
மாற்றி யிருந்தா ளெனவுரைப்பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீ
ரெல்லா மெனக்கோ ரிடர்.

---

* சிலப்பதிகாரம் நாடுகாண்காதை கஉகூ–ஆம் அடி அடியார்க்குநல்லா ருரை—தொல். பொருள். செய்யுளியல் எச, க0ரு-ஆம் சூத்திரத்துப் பேரா சிரியருரை—மேற்கோள்.

எசு கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று— * கூட
லிழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

எஎ செங்கான் மடநாராய் தென்னுறந்தை சேறியே
னின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

எஅ என்னை யுரையலென் பேருரைய லூருரைய
லன்னையு மின்ன ளெனவுரையல்—பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை.

எகூ கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவ மன்னை—யடைக்குமே
லாயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

அ0 வளையவாய் நீண்டதோள் வாட்கணு யன்னை
யிளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேன் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

அக கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையி லோச்சப் பெறுவெனே யானுமோ
ரம்மனைக் காவ லுளேன்.

---

* இதனைக் "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டினுல், இரட்டைப்பட்டாற் கூடுகை: ஒற்றைப்பட்டாற் கூடாமை என்று ஸங்கேதம்" என நாச்சியார்திருமொழியுரையிலும், "மணற்குன்றி னீத்தகன்றூர் வருகென், றூழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் திருச்சிற்றம்பலக்கோவையினும் (கஅசு) " வளைத்துக்கிடந்த வரிமணற் கூடலும் " என அம்பிகாபதிகோவையினும் (கூஉஉ) வருவனவற்றுன் உணர்க.

௮௨ குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்ரு ளன்னை—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் * வெண்டேர்த்
துளங்குநீர் மாமருட்டி யற்று.

௮௩ அலங்குதார்ச் செம்பிய ஞடெழிற்ருேணைக்கி
விலங்கியான் வேண்டா வெனினு—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொ
னீர்மே லெழுந்த நெருப்பு.

௮௪ கோட்டெங்கு சூழ்†கூடற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போ லன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

௮௫ புன்னைகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னக நின்றலரு நன்னுட—னென்னகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தா
னென்கொ லிவரறிந்த வாறு.

௮௬ களியானைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பா ரிழக்க—வணியாகங்
கைதொழு தேனு மிழக்கோ நறுமாவின்
கொய்தளி ரன்ன நிறம்.

௮௭ கனவை நனவென் றெதிர்விழிக்குங் காணு
நனவி லெதிர்விழிக்க நாணும்—புனையிழா
யென்க ணிவையானு லெவ்வாருே மாமாறன்
றன்க ணருள்பெறுமா தான்.

௮௮ தளையவிழும் பூங்கோதைத் தாயரே யாவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா.

---

* வெண்டேர் - பேய்த்தேர். † மாந்தைக் கோமானை எனவும் பாடம்.

அகூ ஓராற்ற னென்க ணிமைபொருந்த வந்நிலையே
கூரார்வேன் மாறனென் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்
கனவு மிழந்திருந்த வாறு.

கூ0 ஊட லெனவொன்று தோன்றி யலருறாஉங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

கூக ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—நாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

கூஉ நாணொருபால் வாங்க நலனொருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

கூங வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே
*மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
றோளுழுவந் தோன்றத் தொழுது.

கூச உகுவாய் நிலத்த துயர்மணன்மே லேறி
நகுவாய்முத் தீன்றசைந்த சங்கம்—புகுவான்
றிரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
னுரைவரவு பார்த்திருக்கு நெஞ்சு.

கூரு கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ றேழி—நெடுஞ்சினவே
லாய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

---

*டுஎசுூ-ஆம் திருக்குறட் பரிமேலழகருரை.

கூசு மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்—சோறடுவா
ராரத்தாற் றீமூட்டு மம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தாற் றேற்றேன் வளை.

கூஎ புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா—விகுகரையி
னேமான் பிணேபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

கூஅ *பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட் போல
வணியிழை யஞ்ச வருமான்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சிறியோர் வாடை சினந்து.

கூகூ பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிக—ணீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

க00 நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
†வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
‡பண்டன்று பட்டினங் காப்பு.

க0க மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணக்கா லாயிரமுஞ் சொல்லுவேன்—கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்.

---

* பிணியுற்றார்க்குப் பிறந்தநாளிற் பிணிமிகும் என்று சோதிடநூல்வல்லார் கூறுவர்.

† தொல். பொருள். செய்யுளியல் எடு-ஆம் சூத்திரத்துப் பேராசிரியருரைமேற்கோள்.

‡ பெரியாழ்வார்திருமொழி 5-ஆம்பத்து 2-ஆம் திருமொழிப்பாடல்களின் ஈற்றடிகளை நோக்குக.

கO௨ வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லா மறிய—வொருகலா
முண்டா யிருக்கவவ் வொண்டொடியாண் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

கO௩ புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினார்
நில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விராஅமலர்த் தார்மாறன் வெண்சாந் தகல
மிராவளிப் பட்ட திது.

கO௪ இப்பியீன் றிட்ட வெறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேன் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

கO௫ இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

கO௬ காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கெ
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

கOஎ யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல
மெய்தா திராக்கழிந்த வாறு.*

கOஅ மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டு நமகுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதா
லுலகங் கிடந்த வியல்பு.

முற்றிற்று.

---

* தொல். பொருள். செய்யுளியல் ௩௪-ஆம் சூத்திரத்துப் பேராசிரிய ருரைமேற்கோள்.

ஸ்ரீ:

# செய்யுண் முதற்குறிப்பகராதி.

[எண்—பக்கஎண்.]


அடிமதில்பாய ௭
அந்தணராவொடு ௧௦
அமிற்கதவம் ௫
அரும்பவிழ்தார்க் ௧௦
அருமணி ௯
அலங்குதார்ச் ௧௭
அள்ளற்பழனத் ௧
அறிவாரார் ௧௪
அறைபறை ௧௪
அன்னையுங் ௧௪
ஆடுகோ ௧௨
ஆய்மணிப் ௧௮
இப்பியீன்றிட்ட ௨௦
இரியன்மகளிர் ௩
இவனென்னலங் ௨௦
உகுவாய்நிலத்த ௧௮
உருவத்தார்த் ௬
ஊடலென ௧௮
எலாஅமடப் ௧௧
என்னெஞ்சு ௧௩
என்னையுரையல் ௧௬
ஏற்பக்குடைந் ௧௫
ஏனையபெண்டி ௭
ஓராற்ருனென்கண் ௧௮
கச்சியொருகான் ௬
கடற்ருனைக் ௧௬
கடும்பனித் ௧௮
கண்டனவுண்கண் ௧௩
கண்ணுர்கதவம் ௧௦
கரிபரந்தெங்கும் ௨
கள்ளிகள்களிகட்கு ௨
களியானைத் ௧௪, ௧௭
கனவினுட் ௧௩
கனவை ௧௭
காப்படங்கென் ௧௧
கார்நறுநீலங் ௧௪
காராட்டுதிரந்தூய் ௨௦
காவலுழவர் ௧
குடத்துவிளக்கே ௧௨
குதலைப்பருவத்தே ௧௭
கூடற்பெருமானைக் ௧௬
கூந்தன்மா ௮
கையதவன் ௧௫
கோடித்தலைத்தார்த் ௮
கொடிபாடித் ௧௬
கொடிமதில் ௬
கோட்டெங்கு ௧௭
சுடரிலைவேற் ௧௨
செங்கணெடியான் ௮
செங்கான்மட ௧௬
செய்யாரெனினுந் ௧௦
செருவெங்கதிர் ௫
தளையவிழும் ௧௭
தாயரடைப்ப ௧௧
தானேற்றனிக் ௧௩
தானைகொண் ௧௩
திறந்திடுமின் ௧௦
துடியடித் ௧௧
தெண்ணீர் ௧௪
தோழிறேற்றுப் ௮
தோற்றமலை ௬
நந்தினிளஞ் ௧
நாணுக்காற் ௧௫
நாணொருபால் ௧௮
நாமநெடுவேல் ௧௯
நிரைகதிர்வேன் ௫
நிறைமதிபோல் ௪
நின்றீமின் ௪
நீணிலத் ௧௧
நீருநிழலும் ௧௫
நேமிநிமிர்தோ ௪
பல்யானைமன்னர் ௪
பறைநிறை ௪
பார்படுப ௯
பாற்றினமார்ப்பப் ௬
பிணிகிடந்தார்க்குப் ௧௯
புகுவார்க்கிடங் ௧௯
புல்லாதார் ௨௦
புலவிபுறக் ௧௫
புன்னைச்சோலை ௧௭
பேயோ ௧௯
போரகத்துப் ௧௨
மடங்காமயி ௮
மந்தரங்காம்பா ௯
மரகதப்பூண் ௭
மருப்பூசியாக ௬
மல்லனீர் ௨௦
மன்னியநாண்மீன் ௧
மன்னுயிர்காவல் ௧௩
மாணுர்க்கடந்த ௧௯
மாலைவிலை ௨
மாறடுபோர் ௧௯
முடித்தலை ௭
மைந்தரோடே ௨
யானூடத் ௨௦
வரக்கண்டு ௧௮
வருககுடநாடன் ௨௦
வரைபொரு ௧௨
வழுவிலெம் ௧௨
வளையவாய் ௧௬
வாகைவனமாலை ௩
வாமான்றேர்க் ௧௨
வாரிய ௧௫
வானிற்கு ௯
வீறுசான்மன்னர் ௫
வேருவரு ௭
வேறுகை ௨